THE HINDU
Region

# No services at outpatient dept. at Jipmer tomorrow

**The Hindu Bureau**
PUDUCHERRY

The Out Patient Departments at Jipmer will be closed on Thursday on account of the Central government holiday for Buddha Purnima. Emergency services will be functional, a press release said.

இந்து தமிழ் திசை 4 CHENNAI புதன், மே 22, 2024

# ஜிப்மரில் நாளை வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது

● புதுச்சேரி

புதுவை ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மத்திய அரசு விடுமுறை தினமான மே 23-ம் தேதி புத்த பூர்ணிமாவை முன்னிட்டு ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது. இந்த தேதியில் நோயாளிகள் வருவதை தவிர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். எனினும் அவசர பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம்போல் இயங்கும் என்று தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி ஜிப்மருக்கு புதுச்சேரி மட்டுமில்லாமல் தமிழக பகுதிகளான விழுப்புரம்,கடலூர், நாகை, திருவாரூர், தஞ்சை உட்பட பல பகுதிகளில் இருந்தும் நோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

இதுகுறித்து நோயாளிகள் கூறுகையில், “ஜிப்மரில் தற்போது வெளிப்புற சிகிச்சைப்பிரிவுக்கு அடிக்கடி விடுமுறை விடுகிறார்கள். இதற்கு வடமாநில பண்டிகைகளை காரணம் தெரிவிக்கிறார்கள். இதனால் இங்குள்ளோர்தான் தவிக்கிறோம். ஜிப்மரில் அடிக்கடி மத்திய விடுமுறை நாட்களில் எல்லாம் வெளிப்புற சிகிச்சை பிரிவு இயங்காது என்று அறிவிப்பதை தவிர்க்க புதுச்சேரி மற்றும் தமிழக அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோல் ஜிப்மரில் சிகிச் சைக்காக முன்பதிவு செய்திருப்போர் மொபைல் எண்களிலும் விடுமுறை நாட்கள் குறித்து ஜிப்மர் தகவல் தெரிவிக்கவேண்டும். அப்போதுதான் பல கி.மீ தொலைவு பயணித்து வருவதை தவிர்க்க இயலும்” என்று தெரிவித்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
22.5.2024 (புதன்கிழமை)

## புத்த பூர்ணிமாவையொட்டி

# ஜிப்மரில் வெளிப்புற சிகிச்சை பிரிவு நாளை செயல்படாது

புதுச்சேரி, மே.22-

புதுச்சேரி ஜிப்மர் நிறுவன இயக்குனர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புத்த பூர்ணிமாவை முன்னிட்டு மத்திய அரசு விடுமுறை தினமான நாளை (வியாழக்கிழமை) ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது. எனவே நாளை நோயாளிகள் வருவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அவசர சிகிச்சை பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம் போல் இயங்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

# ஜிப்மரில் நாளை புற நோயாளிகள் பிரிவு இயங்காது

**புதுச்சேரி, மே 22–**

ஜிப்மர் இயக்குனர் விடுத்துள்ள செய்தி குறிப்பு:

நாளை 23ம் தேதி புத்த பூர்ணிமாவை முன்னிட்டு ஜிப்மரில் புற நோயாளிகள் (ஓ.பி.,) பிரிவு இயங்காது. என புற நோயாளிகள் நாளை ஜிப்மர் வருவதை தவிர்க்கவும். அவசர சிகிச்சை பிரிவு சேவை அனைத்தும் வழக்கம் போல் இயங்கும்.

இவ்வாறு செய்திகுறிப் பில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்
மே 22, 2024 புதன்கிழமை

## புத்த பூர்ணிமாவை முன்னிட்டு

# 23ம் தேதி ஜிப்மரில் வெளிப்புற சிகிச்சை பிரிவு இயங்காது

புதுச்சேரி, மே 22: புத்த பூர்ணிமாவை முன்னிட்டு ஜிப்மரில் வெளிப்புற சிகிச்சை பிரிவு வருகிற 23ம்தேதி இயங்காது என்று ஜிப்மர் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மத்திய அரசு விடுமுறை தினமான 23ம்தேதி புத்த பூர்ணிமாவை முன்னிட்டு




புதுச்சேரி கோரிமேடு ஜிப்மரில் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவுகள் இயங்காது. எனவே இந்த தேதியில் நோயாளிகள் வருவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எனினும், அவசர சிகிச்சை பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம்போல் இயங்கும் என குறிப்பிட்டுள்ளார்.

சமீபகாலமாக மத்திய அரசு விடுமுறை தினங்களில் ஜிப்மர் வெளிப்புற சிகிச்சை பிரிவு செயல்படாமல் முறையான அறிவிப்புகளுடன் மூடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தினமணி
புதன்கிழமை, 22 மே 2024

# ஜிப்மர் புறநோயாளிகள் பிரிவு நாளை இயங்காது

புதுச்சேரி, மே 21: புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையின் புறநோயாளிகள் பிரிவு வியாழக்கிழமை (மே 23) வியாழக்கிழமை இயங்காது.

இதுகுறித்து ஜிப்மர் இயக்கக அலுவலகம் சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மத்திய அரசு விடுமுறை தினமாக வரும் 23-ஆம் தேதி புத்த பூர்ணிமாவை அறிவித்துள்ளது. எனவே, புதுச்சேரி ஜிப்மரின் வெளிப்புற நோயாளிகள் பிரிவு வியாழக்கிழமை இயங்காது. அன்று நோயாளிகள் வருவதைத் தவிர்க்க வேண்டும். ஆனாலும், அவசரப் பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம்போல இயங்கும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.